IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No.115/2023 Date: 24.02.2025.

அ.சா. 7-பழனிசாமி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1, 2 ஆகியோரின் அம்மா காவேரியம்மாளும் என் அப்பாவும் உடன் பிறந்த சகோதரி சகோதரன் என்றால் சரிதான். அதனால் அ.சா.1, 2 எனக்கு அத்தை மகன்கள். அ.சா.6 என் அண்ணன். அ.சா.8 என் அண்ணன் மகன். நாங்கள் அனைவரும் ராசாக்காட்டில் குடியிருக்கிறோம். எங்கள் வீடு கிழமேலாக செல்லும் சரபங்கா நதிக்கு தெற்கிலுள்ளது. நாங்கள் கப்பராயன் காட்டிற்கு செல்ல 1-1/2 கி.மீ தூரம் சுற்றி தான் வரவேண்டும் என்றால் சரியல்ல. 300 அடி தூரம் தான் இருக்கும். நாங்கள் செட்டிப்பட்டி செல்ல வேண்டும் என்றால் சம்பவ இடம் வழியாக செல்ல வேண்டியதில்லை. சம்பவத்தின் போது நான் என் வீட்டிலிருந்தேன். சம்பவம் நடந்த பிறகு தான் நானும், அ.சா.6 ம் சம்பவ இடம் வந்தோம். அதன் பிறகு தான் செல்வம் வந்தார். அ.சா.1, 2 ஏற்கனவே அவர்கள் நிலத்தில் 10 அடி ஆழத்திற்கு மண் அள்ளிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது அந்த இடத்தில் முற்புதராக இருந்தது என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் வந்து எங்களிடம் சொல்லும் போது தான் சம்பவம் பற்றி எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியாது. நான் அ.சா.1, 2 எனக்கு அத்தை மகன்கள் என்பதால் அவர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக முதல் விசாரணையில் பொய் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-பழனிசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.